**THE LABOUR COURT, SALEM**
**CAMP COURT AT DHARMAPURI**
**C.P.No. 59 of 2023**

**19.09.2025**

**RW1 – திரு. R. பிரேம்குமார்**
**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை– (மனுதாரர் தரப்பில்)**

நான் M.Sc., B.Ed படித்துள்ளேன். எங்கள் அலுவலகத்தில் பணியாளர்கள் தொடர்பாக எத்தனை பிரிவுகள் உள்ளது என்றால் பணியாளர் பிரிவு, ஒழுங்கு நடவடிக்கை பிரிவு, விபத்து நஷ்டஈடு பிரிவு, தணிக்கை பிரிவு, கணக்கு பிரிவு, தொழில்நுட்ப பிரிவு, வணிகப்பிரிவு, தொழிற்பயிற்சி பிரிவு, சிவில் பிரிவு உள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் துணை மேலாளரும், உதவி மேலாளரும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். பணியாளர் பிரிவில் எந்த முடிவை எடுக்கும் அதிகாரமும் எனக்கு இல்லை என்றால் சரிதான். நான் இவவழக்கு சம்பந்தமாக மனுதாரருக்கு கொடுக்கவேண்டிய சம்பளம் குறித்து பொது மேலாளருக்கு கருத்துரை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தொழிலாளர்களுக்கு கொடுக்கவேண்டிய சம்பளம் அனைத்தும் அவ்வப்போது ஏற்படுத்தப்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்றால் சரிதான் . எங்கள் நிறுவனம் சம்பள பட்டுவாடா சட்டத்திற்கும், தகுறைந்தபட்ச ஊதிய சட்டத்திற்கும் கட்டுப்பட்டது என்றால் சரிதான். நான் 2015 முதல் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில பணி செய்கிறேன். ம.சா.1 பணிநீக்க உத்தரவில் மனுதாருக்கு மாத சம்பளம் ரூ.7,099/– என குறிப்பிட்டு அதை காசோலை மூலம் வழங்கியுள்ளோம் என்றால் சரிதான். அது கடைசி மாத சம்பளம். Ex.R12 அண்ணா போக்குவரத்துக்கழகத்தில் கொடுக்கப்பட்ட சுற்றறிக்கை என்றால் சரிதான். அது எங்களுக்கும் பொருந்தும். ஆவணத்தில் அதுபோல் இல்லை என்றால் சரிதான். Ex.R12 சுற்றறிக்கை பணிநிரந்தரம் செய்வதற்காக 240 நாட்களை கணக்கிடும் முறை பற்றி மட்டும் சொல்லப்பட்டுள்ளது என்றால் மாதத்தில் 26 நாட்கள் மட்டும் கணக்கிடலாம் என்றும், சம்பளத்திற்கும் அவ்வாறு தான் என

குறிப்பிடப்பட்டுள்ளது. ஆவணத்தில் சம்பளம் பற்றி எதாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தொழிலாளர் நீதிமன்ற தீர்ப்பின் படி மனுதாரருக்கு வேலை கொடுக்காமல் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். Ex.R3,R4 உத்தரவில் மனுதாரருக்கு கடைசிமாத சம்பளத்தின்படி மீண்டும் வேலை கொடுப்பதாக சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. Ex.R3,R4 உத்தரவுகளில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் மனுதாரருக்கு கடைசிமாத சம்பளத்தை கொடுத்து வேலை வாங்கிக்கொள்ளலாம் என சசொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. Ex.R5 உத்தரவின்படி மனுதாரருக்கு தினக்கூலி ரூ.4029/- என சொல்லப்பட்டுளளது என்றால் சரிதான்.

19.04.2018 க்கு பிறகு மனுதாரர் பணிக்கு ஆப்செண்ட் என குற்றச்சாட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு 10830/2016 தாக்கல் செய்த தேதியை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Ex.R8 ல் சொல்லப்பட்டுள்ள தொகை எவ்வாறாக கணக்கிடப்பட்டுள்ளது என்ற விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ரிட்மனு விசாரணையிலும் மனுதாரரை வேலைக்கு திரும்ப அழைத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். உயர்நீதிமன்ற இறுதி உத்தரவில் தொழிலாளிக்கு 2 வார காலத்திற்குள் திரும்ப வேலை கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரருக்கு வார ஓய்வு கொடுத்ததாக என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வார ஓய்வு நாளுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நடைமுறையில் இருக்கக்கூடிய சட்டங்களுக்கு விரோதமாக மனுதாரருடைய சம்பளத்தை குறைத்து கணக்கிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. எ.ம.சா.12 சுற்றறிக்கை எங்கள் கழகத்திற்கு பொருந்தாது என்றும் அது சட்டத்திற்கு விரோதமானது என்றும் சொன்னால் சரியல்ல. முறையற்ற காரணங்களை சொல்லி மனுதாரருடைய வழக்கை ஏற்க மறுப்பதால் கூடுதல் வட்டியோடும்

செலவுத்தொகையுடனும் மனுதாரர் கோரிய தொகை கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem